(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **14.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 மார்ச் 09 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ,** நிதி அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மற்றும் முதுகலை பயிற்சி மையத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் குழுவின் தவிசாளர் சார்பாக கௌரவ நாமல் ராஜபக்ஷ அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலம்;

(ii) 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை;

(iv) 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(v) 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) மாவனல்ல, உடமுல்ல, பேரமடுல்ல எனும் முகவரியில் வதியும் திரு. எச்.டி. உதயகுமாரவினது 2022.01.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பாணந்துற, வேகட, சல்காது மாவத்தை, இல. 09 இல் வதியும் திரு. ஆர்.டப்ளியூ.எஸ்.கே. ரணவக்கவினது 2022.01.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) அலவ்வ, கஹம்பிலியாவல எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.ஏ. அநுர வீரசூரியவினது 2022.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்தார்.

(2) அநுராதபுரம், காசியப்ப மாவத்தை, 3 ஆம் கட்டம், இல. 2354 இல் வதியும் திரு. அசேல பண்டார ஹிப்பொலவினது 2021.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ துமிந்த திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(3) அங்கும்புர, வெலிகெட்டிய, இல. 39 இல் வதியும் திருமதி வீ.எஸ். உடவெலவினது 2021.11.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அப்துல் ஹலீம் சமர்ப்பித்தார்.

(4) ஆனமடுவ, பெரியகுளம், "ஹர்ஷனி மிரான் செவன" எனும் முகவரியில் வதியும் திரு. எல்.பி. கருணாசேனவினது 2021.12.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மாயதுன்ன சிந்தக அமல் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக"என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

"கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக" என பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.41 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

(பி.ப.1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.36 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.18 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.15 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 8 முதல் 10 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

> "(3) இச்சட்டத்தின் பாகம் IV மற்றும் பாகம் V என்பவற்றின் ஏற்பாடுகள் தவிர, இச்சட்டத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைகள் மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்தேதியானது, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சபாநாயகரின் சான்றுரைத் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு முந்தியதானதும் முப்பத்தாறு மாதங்களுக்குப் பிந்தியதானதுமானதொரு தேதியாகவிருத்தலாகாது.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

> "(4) இச்சட்டத்தின் பாகம் IV இன் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(5) இச்சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்பட்டவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்; அத்தேதியானது, (3) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பிந்தாதவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(2) ஓராம் உட்பிரிவின் முறையே பந்தி (iii) மற்றும் (iv)";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(அ) தனிப்பட்ட, வீட்டு அல்லது குடும்ப நோக்கங்களுக்காக";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 முதல் 18 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

19 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"செய்முறைப்படுத்துவதிலிருந்து தவிக்காதுதிருப்பதற்கு கட்டுப்பாட்டா";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் மற்றும் 21 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

22 ஆம் வாசகம்

22 ஆம் பக்கத்தில் 5 முதல் 7 (இரண்டுமுட்பட) வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

‘‘எழுத்திலான அறிவுறுத்தல்களின்மீது மட்டுமே ’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘(ஆ) தோதான தொழினுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம் அந்தரங்கத்தன்மை மற்றும் இரகசியத்தன்மை பற்றிய’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 13 முதல் 20 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘(இ) செய்முறைப்படுத்தலின் தன்மையையும் செய்முறைப்படுத்துநருக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களையும் கணக்குக்கெடுத்து, கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான கோரிக்கையின்மேலான சோதனைகளுட்பட, இணங்கியொழுகுகைக் கணக்காய்வுகளைக் கட்டுப்பாட்டாளர் நிறைவேற்றுவதனை வசதிப்படுத்துதல் வேண்டும்;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 26 ஆம், 27 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘திருப்பிக்கொடுத்தல் வேண்டும்’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 முதல் 25 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

26 ஆம் வாசகம்

29 ஆம் பக்கத்தில் 2 ஆம், 3 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

> “என்பவற்றின்கீழ் விதிக்கப்பட்ட முறையான கடப்பாடுகளுக்கான இணங்கியொழுகுகையை, விடயத்துக்கேற்ப, அத்தகைய கட்டுப்பாட்டா ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“(5) இரண்டாம் உட்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் போதுமாந்தன்மை முடிபு அல்லது (4) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி தோதான பாதுகாப்புகள் இல்லாதவிடத்து, ஒரு பகிரங்க அதிகாரசபை தவிர்ந்த கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், பின்வருமாறிருப்பின் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலாம்:-

(அ) போதுமாந்தன்மை முடிபும் தோதான பாதுகாப்புகளும் இல்லாமை காரணமாகத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு ஏற்படக்கூடிய அத்தகைய செய்முறைப்படுத்தலின் நிகழ்தகு ஆபத்துக்கள் பற்றி அறிவிக்கப்பட்டபின்னர், தரவுடன் தொடர்புபட்டவர் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவின் உத்தேசிக்கப்பட்ட செய்முறைப் படுத்தலுக்குத் தெளிவான முறையில் சம்மதித்திருப்பின்;

அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செயல்நிறைவேற்றுவதற்காக அல்லது தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின் பேரில் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் ஒப்பந்தத்துக்குமுன்னரான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான சட்ட உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காக, பிரயோகிப்பதற்காக அல்லது எதிர்வாதிடுவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் அட்டவணை ஐ இன் (எ) என்னும் விடயத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு பொதுமக்களின் அக்கறை காரணங்களுக்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(உ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோராளின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசரநிலைமைக்குப் பதிலிறுப்பதற்கும் மற்றும் தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது அவரது சட்டப்பாதுகாவலர் சம்மதமளிப்பதற்கும் உடல்ரீதியில் அல்லது சட்டப்படி இயலாதவராகவுள்ளவிடத்து கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் நிபந்தனைகளின்கீழ் அத்தகைய செய்முறைப்படுத்தல் அனுமதிக்கப்படின்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 ஆம் வாசகம்

29 ஆம் பக்கத்தில் 17 ஆம், 18 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

''பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்குத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் பக்கத்தில் 27 ஆம் வாசகத்துக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''கட்டுப்பாட்டாளர்களினால் தரவுடன் தொடர்பட்டோருக்கான பரிந்துகேட்கப்பட்ட செய்திகள்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''இடையீட்டுடனோ அல்லது அதுவின்றியோ, தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் எந்த இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்களுக்குக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து கட்டணமின்றிச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குச் சம்மதித்துள்ளாரோ அந்த எவையேனும் இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்கள் தவிர, தன்னியக்கமாக்கப்பட்ட'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் வாசகம்

31 ஆம் பக்கத்தில் 10 முதல் 29 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

“தரவுப் பாதுகாப்பு அதிகார சபையைத் தாபித்தல்

28. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைத் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டிய அதிகார சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழி யுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் பக்கத்தில் 1 முதல் 21 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“பணிப்பாளர் சபையை அமைத்துருவாக்குதல்

29. (1) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும், (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரச பைக்கு அளிக்கப்பட்ட, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பொறியியல், மருத்துவ, வங்கித்தொழில் மற்றும் நிதி, தொலைத்தொடர்புகள் அத்துடன் சட்டம் என்ற துறைகளில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்துக்குக் குறையாதவர்களும் ஏழுக்கு மேற்படாதவர்களுமான உறுப்பினர்களையும் பொதுப் பயன்பாடுகள், தொழிற் செய்முறைப் புறவொப்படைப்பு (தொசெபு), ஏற்பாட்டியல், காப்புறுதி, வங்கித்தொழில் மற்றும் நிதிசார்துறைகள் என்ற வெவ்வேறு துறைகளில் அனுபவம் கொண்டுள்ளவர்களும் அவர்களுள் ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களேனும் பகிரங்கத்துறை உருவகங்களில் முன்னனுபவம் கொண்டிருப்பவர்களுமான ஆட்களையும் சபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபைக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள், ஒழுங்குபடுத்தும் கருமங்கள், அந்தரங்கத்தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு, தகவற் காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், பொருளியல், நிதி, தகவல், தொழிநுட்பவியல் அல்லது தொடர்புபட்ட துறைகள் என்பவற்றில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இச்சட்டத்துக்கான அட்டவணை VI இன் ஏற்பாடுகள், சபையுறுப்பினர்களின் தகைமையீனங்கள் மற்றும் அகற்றுகைக்கான ஏதுக்கள், அவர்கள் பதவிவிலகுதல், அவர்களின் லீவு அல்லது அவர்கள் வராமை, பதவிக்காலம் மற்றும் அதிகாரசபையின் கூட்டங்களும்

சபையின் தவிசாளர்.

30. (1) சனாதிபதியினாவர், சபையின் தவிசாளராகவிருப்பதற்கு பகிரங்க அல்லது தனியார்துறை உருவகங்களில் பயனுள்ள தலைமைத்துவத்தை வெளிக்காட்டியுள்ள உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது எத்தேதியன்று சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவர் சபையின் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகுதியீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, சனாதிபதி, நியமிக்கப்பட்ட உறுப்பினராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் வாசகம்

33 ஆம் பக்கத்தில் 20 முதல் 27 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விசாரணைகளை நடாத்துதல், முறைப்பாடுகளைப் பெறுதல், அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துதல், பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் குற்றப்பணங்களை விதித்தல்;

(ஊ) இச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, சத்தியத்தின்கீழ் அல்லது உறுதியுரையின்கீழ் ஆளொருவரை விசாரணை செய்தல் மற்றும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் பணிகளைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான எவையேனும் தகவல்களைக் காண்பிக்கும்படி அவசியமானவிடத்து அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(ஐ) எந்த உறுப்பினர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் தத்துவங்கள் அத்துடன் கடமைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டுமோ அந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள மதியுரைக் குழுக்களை நியமித்தல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

31 ஆம் வாசகம்

39 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"(ச) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக துறைசார் வழிகாட்டுநெறிகளையும் விதிகளையும் வகுத்தமைப்பதற்கும் உரிமம் தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினாலான அல்லது செய்முறைப்படுத்துநர்களினாலான செய்முறைப்படுத்தலின் கட்டளைக்கற்களை அடையாளங் காண்பதற்கும் வரைவிலக்கணங்கூறுவதற்குமான மதியுரைக் குழுக்களை நியமித்தல்.";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

40 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“அதிகார சபை உரிமங்களை வழங்கலாம்.

34. (1) அதிகாரசபையானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக மதியுரைக் குழுவினது விதப்புரைகளின் அடிப்படையின்மீது, உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களுக்கு அல்லது செய்முறைப்படுத்துநர்களுக்கு உரிமங்களை வழங்கலாம்.

(2) மதியுரைக் குழுவின் விதப்புரைகள், உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினால் அல்லது செய்முறைப்படுத்துநர்களினால் செய்முறைப்படுத்தலின் கட்டளைக்கற்களை அடையாளங்கண்டு வகுதிகளை வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) அத்தகைய உரிமங்கள் தொடர்பான வகுதிகள், கட்டளைக்கற்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவமும் கால எல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, புதுப்பித்தல், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை, உரிமத்தை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு மற்றும் விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் என்பன விதித்துரைக்கப்படலாம்.

(4) அத்தகைய உரிமங்களின் ஏற்புடையற்பாலனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் அல்லது செய்முறைப்படுத்துநர்கள் இணங்கியொழுகுவதனை அதிகாரசபையானது பரிசீலனைசெய்து கண்காணிக்கலாம்.’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் வாசகம்

41 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

‘‘படுத்துநருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்தபின்னர், விதித்துரைக் ’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படியும்; அல்லது ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(இ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவரினாலான ஏதேனும் மீறுகையின் விளைவாகத் தீங்கை, இழப்பை அல்லது சேதத்தை உற்றுள்ள இன்னலுற்ற ஆளொருவருக்கு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக நட்டஈடாக அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யும்படியும்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைப் பிணிப்பாதல் வேண்டுமென்பதுடன் அவர் அத்தகைய தொடர்பாடல் தேதியிலிருந்து அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.".

## "பாகம் VI

## அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்.

36. (1) சபையானது, பகிரங்கத்துறைக்கு அல்லது தனியார் துறைக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அதிகாரசபைக்கு நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமுட்பட அவரது தொழில் நிபந்தனைகள் விதிகள் என்ற வழியாக சபையினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் பின்வருமாறிருப்பின், சபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாய சபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்,

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களினதும் கொடுக்கல் வாங்கல்களினதும் பணிப்பும், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகமும், புரிகையும், நிறைவேற்றுகையும் அத்துடன் அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(5) சபையானது, பின்வரும் காரணங்களுள் ஏதேனுமொன்றைக் கருத்திற்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அதிகாரசபைக்காக அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் அக்கறை முரண்பாடு ஏற்படக்கூடிய சாத்தியம்;

(ஆ) அவ்வாள் சித்தசுவாதீனமற்றவராக அல்லது அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலதவராக வந்தால்;

(இ) அவ்வாள் அவரது கடமைகள் அல்லது பணிகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக இருந்தல்; அல்லது

(ஈ) அவ்வாள் அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது சுதந்திரத்துடன் தலையிடக் கூடிய ஏதேனும் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது சபையின் பொதுவான பணிப்புகளுடன் இணங்கியொழுகாதிருந்தால்,

ஆயின், சபையானது, அத்தகைய அகற்றுகைக்குமுன்னர், கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளித்தல் வேண்டும்.

அதிகார சபையின் பணியாட்டொ குதியினர்

37. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அதன் பணிகளின் வினைத்திறனான நிறைவேற்றுகைக்கு அவசியமென அது கருதுகின்றவாறான ஊழியர் கோப்புப் பதவிகளை உருவாக்கலாம் மற்றும் அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர் களினதும் ஊழியர்களினதும் சம்பளங்களையும் வேதனங் களையும் அல்லது வேறு ஊதியத்தையும், நன்மைகளையும் மற்றும் ஓய்வூதியங்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, தகவற்காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், தகவல் தொழினுட்பவியல், நிதி, சட்டம் என்ற விடயங்களின் மீதும் மற்றும் வேறு தொடர்புபட்ட விடயங்களின்மீதும் தொழினுட்ப ஆளணியினரின் பயிற்சியை மேம்படுத்துதலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டுமென்பதுடன் இந்நோக்கத்துக்காக, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறனுடைய அதிகாரசபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைச் செலவு தொகைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் அலுவலர்களுக்கு ஊழியர்களுக்கும் ஏற்புடையற்பாலதாகவிருக்க வேண்டிய நடவடிக்கைக்கோவையொன்றை அதிகாரசபை தயாரித்தல் வேண்டும்.

(4) அத்தகைய நடவடிக்கைக் கோவையை காலத்துக்குக்காலம் திரிபுபடுத்துகின்றதன் மூலம், ஒழிக்கின்றதன் மூலம் அல்லது திருத்துகின்றதன் மூலம் அதிகாரசபை அதனை மீளாய்வு செய்யலாம்.

(5) எவரேனுமாள் பின்வருமாறிருக்குமிடத்து, அதிகாரசபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாய சபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்ஞ அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப்பினல் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக அதிகாரசபைக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகார சபைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) அதிகாரசபையானது, அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன், இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு அரச நிறுவனங்களுக்கு அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு, அத்தயை நிறுவனத்துக்கும் அதிகாரசபைக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு வேலைக்கமர்த்துகையின்மீது அதன் அலுவலர்களை அல்லது ஊழியர்களை மாற்றுச்சேவைக்கு விடுவதற்கு முன்மொழியலாம். மாற்றுச் சேவைக் காலப்பகுதியானது அதிகாரசபைக்கான சேவையாகக் கொள்ளப்படுவதாகக் கருதுப்படுதல் வேண்டும்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

33 ஆம் வாசகம்

42 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

‘‘தண்டத்தை அல்லது ஒரு நட்டஈட்டை, அல்லது விடயத்திற்கேற்ப, இரண்டையும் செலுத்தும்படி அத்தகைய கட்டுப்பாட்டாளரை ’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

42 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை காரணமாகப் பாதிக்கப்பட்ட இன்னலுற்ற ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான நட்டஈடாகச் சேகரிக்கப்பட்ட அத்தகைய பணத்தொகையைக் கழித்த பின்னர் திரட்டு நிதியத்துக்கு வரவு ’’;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

44 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை

அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(8) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மீளாய்வு என்றவகையான விண்ணப்பமொன்று தொடர்பில் அந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும். ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 ஆம் வாசகம்

46 ஆம் பக்கத்தில் 11 முதல் 18 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"40. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான ஏதேனும் விலக்களிப்பு, மட்டுப்பாடு அல்லது மதிப்புக்குறைப்பு, அத்தகைய விலக்களிப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது மதிப்புக்குறைப்புக்கு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டு, அடிப்படை உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் சாராம்சத்துக்கு மதிப்புக்கொடுப்பதுடன் பின்வருவனவற்றுக்காகச் சனநாயக சமூகமொன்றில் அவசியமான மற்றும் விகிதாசாரப்படியான வழிமுறையொன்றை அமைத்துருவாக்குமிடத்துத் தவிர, அனுமதிக்கப்படுதலாகாது:- ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

47 ஆம் பக்கத்தில் 1 ஆம், 2 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

**"பாகம் VIII**

**அதிகாரசபையின் நிதியம்**

"அதிகார சபையின் நிதியம்

41. (1) அதிகாரசபையானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்ஸ்ரீ அத்துடன்

(ஆ) அதிகாரசபையனாது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஈ) திரட்டு நிதியத்திலிருந்து, அரசாங்கத்திடமிருந்து அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து, அரச முகவராண்மைகளிடமிருந்து மற்றும் இலங்கையினுள்ளான அல்லது இலங்கைக்கு வெளியேயான பல்புடை அத்துடன் இருபுடை முகவராண்மைகளிடமிருந்து கொடைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையினால் முதலீடு செய்யப்படலாம்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

36 ஆம் வாசகம்

46 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

**"“பாகம் IX**

**நானாவிதமானவை**''.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

37 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 ஆம் வாசகம்

46 ஆம் பக்கத்தில் 24 முதல் 31 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட)நீக்கிவிட்டு பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"அதிகார சபையின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கையளித்தல்.

44. (1) சபையானது, எழுத்திற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதியினால் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் கையளிக்கப்படுதல்

45. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவ்வலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வலுவலரொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுவிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை மற்றும் பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

செலவுகள், அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்

46. (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்திற் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் ஓர் உறுப்பினரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால்

செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் செயல் நிறைவேற்றத் தைப் பரிசீலனை செயதல்

47. அமைச்சர் காலத்துக்குக் காலம், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தைப் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அதன் அலுவல்களும் செயற்பாடுகளும் தொடர்பான அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அதிகாரசபையைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

வருடாந்த அறிக்கை

48. (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சர் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் அந்நிதியாண்டின்போது அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய அறிக்கையும் ஆவணங்களும் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

39 முதல் 41 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

42 ஆம் வாசகம்

46 ஆம் பக்கத்தில் 6 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 ஆம் வாசகம்

49 ஆம் பக்கத்தில் 14 முதல் 17 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட)நீக்கிவிட்டு பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"(அ) பல்வேறு அலுவலர்களின் மற்றும் ஊழியர்களின் ஆட்சேர்ப்புத் திட்டங்களும், நியமன நியதிகளும், அவர்களைத் தொழிலுக்கமர்த்துதலும் பதவிநீக்குதலும் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளுமுட்பட அவர்களின் தத்துவங்களும் பணிகளும் அவர்களுக்கு ஊதியமளித்தலும்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

44 ஆம் வாசகம்

51 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக்காக அறவிடப்பட்ட கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் குறித்துரைத்தல்;

(உ) உரிமங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவம் மற்றும் கால எல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, அத்தகைய உரிமங்களைப் புதுப்பித்தல், இடைநிறுத்துதல், இல்லாதாக்குதல் மற்றும் அத்தகைய உரிமங்களை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு;

(ஊ) உரிமங்களை வழங்குவதற்காகக் கட்டணங்களை விதித்தல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

45 மற்றும் 46 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

47 ஆம் வாசகம்

54 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"சிறுவர் என்பது, 16 வயதுக்குக் குறைந்த ஆளொருவர்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

54 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச்

செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''பகிரங்க அதிகாரசபை, பகிரங்கக் கூட்டுத்தாபனம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

57 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''(அ) ஒரு பெயர், அடையாளங்காண் இலக்கம், நிதிசார் தரவு'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

60 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''சபை, நியதிச்சட்டமுறையான'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

60 ஆம் பக்கத்தில் 12 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''அதிகாரசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

61 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''நம்பிக்கைகள், மரபுவழித்தரவைச்;'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

48 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

I ஆம் அட்டவணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

II ஆம் அட்டவணை

65 ஆம் பக்கத்தில் அட்டவணை II இன் (ஊ) எனும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(ஊ) தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்கும் அதேவேளையில், பின்பற்றப்பட்ட இலக்குக்கு அவசியமானதாகவும் விகிதாசாரப்படியானதாகவும் இருக்கவேண்டிய, அட்டவணை I இன் (எ) என்னும் விடயத்தின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது பொதுமக்களின் அக்கறையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான ஏதேனும் நோக்கத்துக்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

III முதல் V வரையான அட்டவணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

VI ஆம் அட்டவணை

71 ஆம் பக்கத்தில் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(பிரிவு 29(5))

அட்டவணை VI

உறுப்பினர்களின் பதவிக் காலம்

1. தவிசாளர் தவிர்ந்த சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுகாலமொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

அதிகார சபையின் உறுப்பினர்கள் பதவி விலகுதல்

2. (1) சபையின் எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்கு விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது சனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) இறப்பு, பதவிவிலகுகை, அகற்றுகை காரணமாக எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதியானவர், 29 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வேறோராள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கு அவரை நியமிக்கலாம்.

(3) தவிசாளர் தவிர்ந்த அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், சனாதிபதியானவர் 29 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின் போது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(4) அதிகாரசபையின் அனுமதியை முதலில் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத சபையின் உறுப்பினரொருவர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

சபையுறுப்பினரொருவரின் தகைமையீனங்களும் அகற்றுகைக்கான ஏதுக்களும்.

3. (1) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகார சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) சித்தசுவாதீனமற்றவராக அல்லது தனது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக இருந்தால் அல்லது வந்தால்;

(இ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராக இருந்தால் அல்லது வந்திருந்தால்;

(ஈ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(உ) பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்தால்.

(2) சனாதிபதியானவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவர் பின்வருமாறிருப்பின், அவரை ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து அகற்றுதல் வேண்டும்:-

(அ) அவரது கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்தால்;

(ஆ) அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதனால் அதிகாரசபையின் நலனுக்குத் தீங்குவிளைவிக்கும் வகையில் தனது பதவியைத் துர்ப்பிரயோகம் செய்தால்;

(இ) விடயம் 3 இன் (1) ஆம் பந்தியின்கீழ் தகைமையற்றவராகவிருந்தால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால்.

உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிக்காட்டுதல்

4. சபையினால் ஏதேனும் கருமத்தின்மீது எடுக்கப்படவேண்டிய ஏதேனும் முடிபில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அக்கறை கொண்டுள்ள ஓர் உறுப்பினர், அத்தகைய முடிபு எடுக்கப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிக்காட்டுகை, சபையின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர், அக்கருமம் தொடர்பாக சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலாகா தென்பதுடன் அத்தகைய கலந்தாராய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்படுகையில் அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியேறுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம்

5. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படலாமென்பதுடன் அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய அவர்களின் பணிகளை அவர்கள் நிறைவேற்றுதலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

6. (1) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், தவிசாளருட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையின் எல்லாக் கூட்டங்களையும் அழைத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப்படலாம், ஒன்றில்-

(அ) ஒரு கூட்ட நடப்பெண்ணாகவமைகின்ற எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றுகூடியிருப்பதன்மூலம்; அல்லது

(ஆ) கட்புல-செவிப்புலத் தொடர்பாடல்மூலம்; இதனூடாக, பங்கு பற்றுகின்றவர்களும் ஒரு கூட்டநடப்பெண்ணாக வமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டம் நடைபெறும்வரை ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரையும் சமகாலத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமானவர்களாக இருப்பர்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தவிசாளர் தனது சொந்த வாக்குடன் சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(5) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) சபையின் கூட்டங்கள், அதனால் காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் நிலைநாட்டப்பட்ட நடவடிக்கைமுறைக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

ஒரு வெற்றிடம் காரணமாக வழக்கு நடவடிக்கைகள், செயல்கள் அல்லது முடிபுகள் செல்லுபடியற்றனவாக்கப்பட மாட்டாது.

7. சபையின் வழக்கு நடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன்காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

அதிகார சபையின் இலச்சினை

8. (1) அதிகாரசபையின் இலச்சினை சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை சபையின் ஓர் உறுப்பினரினதும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலும் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வராதிருப்பின் சபையின் எவரேனும் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர, ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, இலச்சினை எந்தச் சாசனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாசனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

"அட்டவணை இரண்டாம் முறையாக மதிப்பீடு செய்யப்படுமாக'' எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை சட்டமூலத்துடன் சேர்க்கப்பட வேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப் பெயர்

விரிவுப் பெயரில் ''பெயர்குறிப்பதற்கு" என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

''தாபிப்பதற்கு. '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"விரிவுப்பெயர் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் திருத்தங்களுடன் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. சிசிர ஜயகொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

''சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று சபாநாயகரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. ஒத்திவைப்பு: (கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தடையற்று இயக்குதல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.22 மணிக்கு கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே தலைமை தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பி.ப. 6.03 மணிக்கு பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2022 மார்ச் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.